சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 04.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **107/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-1 |
| சாட்சியின் பெயர் | : | வசந்தா |
| கணவர் பெயர் | : | நாவலன் |
| கிராமம் | : | திருமெய்ச்சூர் |
| தாலுக்கா | : | நன்னிலம் |
| தொழில் | : | அரசியல் |
| வயது | : | 58 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

3, 4, 6, 8 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி வேறொரு வழக்கில் காவலில் இருந்து வருகிறார். அவர் பி.டி. வாரண்ட் மூலம் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். 5ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

## முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். மேலும் நான் இந்திய கம்யூனிஸ்ட்கட்சியில் நன்னிலம் பகுதியில் உள்ள மகளிர் மாதர் சங்கத்தினுடைய தலைவியாக இருந்து வருகிறேன். நான் இந்து பறையன் சமூகத்தை சேர்ந்தவர் ஆவேன். எனது கணவர் பெயர் நாவலன், அவர் இறந்து விட்டார். அவரும் எனது சமூகத்தை சேர்ந்தவர் தான். ஆஜர் எதிரிகளான காளீஸ்வரன் (1 வது எதிரி), பிரகாஷ் (2 வது எதிரி), ஜீவா (3 வது எதிரி), ராமன் (4 வது எதிரி), பச்சைபிள்ளை (5 வது எதிரி), பரத் (6 வது எதிரி) ஆகியோர்களை எனக்கு தெரியும். எதிரிகள் திருமெய்ச்சூரில் எங்களது தெருவிற்கு பக்கத்து தெருவில் குடியிருந்தார்கள், அந்த வகையில் எனக்கு தெரியும். எனது வீட்டுக்காரர் சி.பி.ஐ-(எம்) -ல் திருவாரூர் மாவட்டத்தினுடைய மாவட்ட செயலாளராகவும், திருவாரூர் மாவட்ட விவசாய சங்க செயற்குழு உறுப்பினராகவும் இருந்தார். எனது கணவர் பொதுக்கூட்டங்களில் பேசுவார். அவ்வாறு பேசும்போது, சாராயம் விற்பனை செய்வது தொடர்பாகவும் பேசுவார். சிவகங்கையை சேர்ந்த பன்னீர்செல்வம் என்பவர் எங்கள் ஊரில் வந்து 45 ஆண்டு காலமாக வசித்து வந்தார். அவர் சாராயம் காய்ச்சி விற்பனை செய்யும் தொழில் செய்து வந்தார். எனது கணவர் 19.01.2011 ம் தேதியன்று இறந்து விட்டார். அவர் இறப்பதற்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு பன்னீர்செல்வம் (7 வது எதிரி ) அவர்கள் வசிக்கும் பகுதியில் பிரச்சனை ஏற்பட்டு ஒரு வீடு எரிந்து விட்டதாக சொல்லிக்கொண்டார்கள். ஆனால் வீடு எரிந்ததை நான் அருகில் போய் பார்க்கவில்லை.

கடந்த 19.01.2011 ம் தேதியன்று மாலை 04.00 மணியளவில் எனது கணவர் நாவலரும், அகிலாம்பேட்டையை சேர்ந்த ராஜா என்பவரும் திருமெய்ஞானம் என்ற ஊரில் நடைபெறும் கூட்டத்திற்காக சென்றார்கள். அன்றைய தினம் என் கணவருடன் சென்றிருந்த ராஜா என்பவர் எனக்கு மாலை 07.30 மணியளவில் போன் செய்தார். அவர் தானும், எனது

கணவரும், பொதுக்கூட்டத்திற்கு போய்விட்டு இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது, மாங்குடி என் இடம் அருகில் வரும்போது, இரண்டு இரு சக்கர வாகனங்களில் தலா 3 நபர்களாக மொத்தம் 6 பேர் வந்து, தங்களை தாக்கியதாக சொன்னார். உடனே, எனது மகள் செங்கொடி என்பவரை அழைத்துக்கொண்டு எனது ஊரிலிருந்து நாங்கள் நடந்து சென்றோம். அப்பொழுது, ஊரிலிருந்து எனது தம்பி வந்தார். அவர் எங்களை இரு சக்கர வாகனத்தில் மாங்குடிக்கு அழைத்து சென்றார். நான் மாங்குடிக்கு சென்று சங்கர் என்பவர் வீட்டில் இறந்து கிடந்தார். எனது கணவரின் இடது கை மணிக்கட்டு, இடது தோள்பட்டை, தலையில் காயம் இருந்து, மூளை சிதறி கிடந்தது. இரத்த வெள்ளத்தில் கிடந்தார். பார்க்கவே பயங்கரமாக இருந்தது. நானும், எனது மகளும் பார்த்து விட்டு இரவு 11.45 மணியளவில் பேரளம் காவல் நிலையத்திற்கு எனது தம்பியுடன் இரு சக்கர வாகனத்தில் சென்றோம். நான் காவல் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள கடையில் பேப்பர் வாங்கி நான் சொல்லச்சொல்ல புகாரை என் கூட வந்திருந்தவர் எழுதினார். அதில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்தான் நான் கொடுத்த புகார் ஆகும். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் புகார் அளித்த பின்னர் வீட்டிற்கு வந்துவிட்டேன். மறுநாள் காலை திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனை அறைக்கு சென்றேன். அங்கேயும் போலீசார் விசாரித்தார்கள். பின்னர் பிரேத பரிசோதனை முடித்து எனது கணவரின் பிரேதத்தை ஒப்படைத்தார்கள். எனது கணவரை நான் எங்கள் ஊருக்கு எடுத்து சென்று எங்கள் ஊர் இடுகாட்டில் அடக்கம் செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எனது கணவர் மீதிருந்த காயங்கள் எவ்வாறு ஏற்பட்டது என்றால், ராஜா என்பவர் என்னிடம் காளீஸ்வரன் (1 வது எதிரி), பிரகாஷ் (2 வது எதிரி), ஜீவா (3 வது எதிரி), ராமன் (4 வது எதிரி), பச்சைபிள்ளை (5 வது எதிரி), பரத் (6 வது எதிரி) ஆகியோர்கள் காயம் ஏற்படுத்தியதாக சொன்னார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.04 16:28:56 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.